மாண்புமிகு பேரவைத் தலைவர்: மற்றதெல்லாம் Monday எடுத்துக்கொள்வோம். (குறுக்கீடு) திங்கட்கிழமை எடுத்துக்கொள்வோம். நேரம் இல்லை. இரண்டு மானியங்கள் இருக்கின்றன. (Interruption) No. No. We have no time. please sit down.

4. கவன ஈர்ப்பு

தளி ஒன்றியம், மஞ்சுகொண்டபள்ளி ஊராட்சி, சாலை வசதி ஏற்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. டி. செங்குட்டுவன் மற்றும் திரு. டி. இராமச்சந்திரன் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், யார் முதலில் கொடுத்தது? (குறுக்கீடுகள்) முதலில் திரு. டி. செங்குட்டுவன் கொடுத்திருக்கிறார். திரு. செங்குட்டுவன். ஒரே சப்ஜெக்ட். (குறுக்கீடுகள்) திரு. செங்குட்டுவன், அவர் பேசட்டுமா? சரி. (குறுக்கீடுகள்) சரி, திரு. டி. இராமச்சந்திரன், பேசுங்கள்.

*திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டம், தளி ஊராட்சி ஒன்றியம், மஞ்சுகொண்டபள்ளி ஊராட்சிக்குத் தமிழக எல்லைக்குள் சாலை வசதி ஏற்படுத்தவும் மற்றும் மஞ்சுகொண்டபள்ளி, பேல்பட்டி இடையே தார்ச் சாலை அமைக்கவும் வேண்டிய அவசியம்" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

அறிக்கை

தளி ஒன்றியம், மஞ்சுகொண்டபள்ளி கிராமம் வரை வாகனங்கள் சென்று வரும் நிலையில் கீழ்க்காண் மண் சாலை வசதிகள் உள்ளன.

1. தக்கட்டி-உன்சனஹள்ளி-பேல்பட்டி-மஞ்சுகொண்டபள்ளி-31.50 கி.மீ.

2. கோட்டையூர் உஜினியம்-தெப்பக்குழி-மஞ்சுகொண்டபள்ளி-27 கி.மீ. இவற்றில் உன்சனஹள்ளி கிராமம் கர்நாடக எல்லைக்குட்பட்டதாகும்

3. இதற்கிடையில், பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின்கீழ் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 26 சாலைப் பணிகளுக்கு (ரூ.921.71 இலட்சம் மதிப்பீட்டில்) அரசு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இவற்றில் கீழ்க்கண்ட மூன்று சாலைகள் வனப் பகுதிக்குள் செல்கின்றன.

1) அஞ்செட்டி-உரிகம்-பேல்பட்டி வரை 0/0-13/0 கி.மீ.-13 கி.மீ.

2) அஞ்செட்டி-உரிகம்-பேல்பட்டி வரை 13/0-25/0 கி.மீ.-12 கி.மீ.

3) அஞ்செட்டி-நாட்ராம்பாளையம்-தொட்டமஞ்சி-9.43 கி.மீ.

மேற்காண் பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின்கீழ் அமைக்க உள்ள வரிசை எண் 1 மற்றும் 2-ல் குறிப்பிட்ட சாலையானது, உரிகம் காப்புக்காடு மற்றும் பிலிக்கல் காப்புக்காட்டின் வழியாகச் செல்ல உள்ளது. உரிகம் காப்புக்காட்டில் 1.3 கி.மீ. தூரம், 9 அடி அகலம் அனுமதிப் பாதையும், பிலிக்கல் காப்புக்காட்டில் 6 கி.மீ. தூரம், 18 அடி அகலம் அனுமதிப் பாதையும் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின்கீழ் (PMGSY) 7.50 மீட்டர் அகலத்திற்குச் சாலை அமைக்க சுமார் 12 மீட்டர் அகலம் வன நிலம் தேவைப்படுகிறது. மொத்தம் அமைக்க உள்ள 25 கி.மீ. தூரத்தில், சுமார் 6 கி.மீ. தூரம் வருவாய் நிலமும், மீதம் 19 கி.மீ. தூரம் காப்புக்காடுப் பகுதியும் அடங்கும்.

இயற்கையாக வளர்ந்த மரங்கள் உள்ள மேற்காண் இரு காப்புக்காடுகளுக்குள்ளும் இந்தச் சாலை அமைக்கப்பட உள்ளது.

மேலும், வன நிலத்தில் சாலையமைக்க வேண்டுமெனில், கீழ்க்கண்ட வழிமுறைகளைப் பின்பற்றுவது மிகவும் அத்தியாவசியமானதாகும்:

1. மாற்றம் செய்யப்படும் வன நிலத்திற்கு இரு மடங்கு காடு வளர்ப்பதற்கான நிலமாக வனத் துறைக்குத் தர வேண்டும்.

2. வன நிலத்திற்குப் பதிலாக அளிக்கப்படும் வனமற்ற நிலத்தில் மரங்களை வளர்ப்பதற்கான செலவினத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

3. வன நிலத்தில் வெட்டப்படும் மரங்களுக்குண்டான மதிப்பீட்டுத் தொகை, ஈட்டுத் தொகையாக வனத் துறைக்கு வழங்கப்பட வேண்டும்.

4. 2002 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி 1 எக்டேருக்குக் குறைவான மாற்றம் செய்யப்படும் தற்போதைய வன நிலத்திற்கு அளிக்கப்படும் முழு மதிப்பீட்டிலிருந்து பள்ளி, மருத்துவமனை ஆகியவற்றுக்கு மட்டும் விலக்களிக்கப்படும். இதர இனங்களுக்கு வன நிலத்தின் மதிப்பீட்டுத் தொகை வனத் துறைக்குச் செலுத்தப்பட வேண்டும்.

5. வன நிலத்தைத் தவிர வேறு மாற்று நிலம் கிடைக்கப்பெறவில்லை என்பதற்கான சான்று மாவட்ட ஆட்சித் தலைவரால் வழங்கப்பட வேண்டும்.

மேற்கூறிய விதிமுறைகளைப் பின்பற்றி மாவட்ட ஆட்சித் தலைவருடனும், சாலைப் பணி செய்ய உள்ள துறையுடனும் (User Agency) கலந்தாலோசித்து, வனப் பாதுகாப்புச் சட்டம், 1980-ன்படி உரிய பிரேரணைகளை மத்திய அரசின் ஒப்புதல் பெறும்பொருட்டு, வனத் துறைக்குப் பணி மேற்கொள்ளும் துறை (User Agency) சமர்ப்பித்தல் வேண்டும். இது தவிர, இயற்கையாக வளர்ந்த மரங்களை வெட்ட வேண்டிய காரணத்தினால், உச்ச நீதிமன்றத்தின் அனுமதியையும் பெறுவது அத்தியாவசியமானதாகும்.

(4) இது சம்பந்தமாக மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர், நெடுஞ்சாலைத் துறை மற்றும் மாவட்ட வனத் துறை அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து, மேலே கூறப்பட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்து, மைய அரசு மற்றும் உச்ச நீதிமன்றத்தின் உரிய அனுமதியினை பெற்ற பின்னர், 2008-2009 ஆம் ஆண்டில் இச்சாலைப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன்.

திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். என்னுடைய தளி தொகுதி, மஞ்சுகொண்டபள்ளி ஊராட்சி, 11 மலைக் கிராமங்களைக் கொண்ட பகுதி. அதில் 4,370 பேர் வசித்து வருகிறார்கள். அவர்கள் தங்களுடைய அன்றாட அத்தியாவசியத் தேவைகளுக்குச் செல்லவேண்டும் என்றால், 17 கி.மீ. தூரம் கர்நாடக மாநிலத்தின் உன்சனஹள்ளி வரை சென்று அஞ்செட்டி செல்லவேண்டியிருக்கிறது. அதேபோல், அங்கே படிக்கின்ற பள்ளி மாணவ, மாணவிகள் நடுநிலைப் பள்ளிக்குச் செல்லவேண்டுமென்றால், 17 கி.மீ. தூரம் கர்நாடக மாநில எல்லையிலே நடந்து சென்று, பேருந்துகளிலே ஏறி, அஞ்செட்டிக்கு 44 கி.மீ. செல்லவேண்டியிருக்கிறது. அதேபோல், பொது மக்கள் தங்களுடைய மருத்துவ வசதிக்குச் செல்லவேண்டும் என்றால்கூட, 17 கி.மீ. தூரம் வனப் பகுதியில் நடந்து செல்லவேண்டியிருக்கிறது. அதேபோல், ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு அந்தப் பகுதி மக்கள் தங்களுடைய அன்றாட அடிப்படைத் தேவைகளுக்குச் செல்லவேண்டும் என்று சொன்னால், 44 கி.மீ. தூரம் செல்லவேண்டியிருப்பதாலும், அதேபோல், கர்நாடக மாநிலத்திலே. .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. இராமச்சந்திரன், இரண்டு கேள்விகள் மட்டும் கேட்கலாம்.

திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடித்துவிடுகிறேன். கர்நாடக மாநிலத்திற்குச் செல்வதால் அங்கே தமிழர்களுக்கு அடிக்கடிப் பிரச்சினை ஏற்படும்போதெல்லாம் என்னுடைய தளி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த மக்கள் பெரிய அளவிற்குப் பாதிக்கப்படுகிறார்கள். அதேபோல், வனப் பகுதி என்பதால், தொடர்ந்து வன விலங்குகளாலும், யானைகளாலும் மிதிபட்டு அந்த மக்கள் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறார்கள். நேற்றுகூட, அந்த வனப் பகுதியிலே மஞ்சுத் திருவிழாவிற்குச் சென்றுவிட்டு துரைசாமி என்பவர் அந்த வழியில் வரும்போது, காட்டு யானையால் மிதிபட்டு இறந்துள்ளார். அதுபற்றிக்கூட நேற்றைக்குக் கவன ஈர்ப்புத் தீர்மான அறிவிப்புக் கொடுத்திருக்கிறேன். ஆகவே, தமிழக எல்லைப் பகுதிகளுக்குள் உரிகம், உடுமராணி பிரிவு சாலை வழியாக 25 கி.மீ. தூரத்திற்கு பாரதப் பிரதம மந்திரி கிராமப்புற சாலைத் திட்டத்தின்கீழ் (PMGSY) பகுதி நான்கில் 6 கோடியே 24 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு.

ஒப்பந்தப்புள்ளிகள் கோரும் சமயத்தில், வனத் துறை அதற்கு ஒப்புதல் வழங்காத காரணத்தினால், அந்தப் பணிகள் நிலுவையில் உள்ளன. ஏற்கெனவே உடுமராணி பிரிவு சாலையிலிருந்து மேல்பட்டி வரை . . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இராமச்சந்திரன், நான் இரண்டு கேள்விகள்தான் கேட்கலாம் என்று சொன்னேன். அவர் விவர அறிக்கை கொடுத்திருக்கிறார். இரண்டு கேள்விகள் அதன்மீது கேட்பதாக இருந்தால், கேளுங்கள். (குறுக்கீடுகள்) சொல்லுங்கள்.

முற்பகல் 10-50

திரு. டி. இராமச்சந்திரன்: சாலை அமைத்துத் தர மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி வழங்கும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அஞ்செட்டி, உரிகம், மேல்பட்டி சாலை, 25 கிலோ மீட்டர் தொலைவு உள்ளது. அது உரிகம் காப்புக்காடு வழியாகவும், பிலிக்கல் காப்புக்காடு வழியாகவும் செல்கிறது. அந்த உரிகம் காப்புக்காடு சாலை 13 கிலோ மீட்டர் தொலைவில் செல்கிறது. அது 9 அடி அகலம் இருக்கிறது. அதுபோலவே பிலிக்கல் காப்புக்காடு சாலையில் 6 கிலோ மீட்டர் காப்புக்காட்டிலே செல்கிறது. அது 18 அடி அகலம் இருக்கிறது. இந்தச் சாலையை அமைக்க வேண்டுமேயானால், பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டத்தின் வழியாகச் சாலை அமைப்பதற்கு 7.5 மீட்டர் அகலம் வேண்டும். அதற்கு நிலம் 12 மீட்டர் வேண்டும். அந்த 12 மீட்டர் நிலம் வேண்டுமேயானால், 1980 ஆம் ஆண்டு மத்திய அரசு வனப் பாதுகாப்புச் சட்டப்படி சில நிபந்தனைகளை நாம் நிறைவேற்ற வேண்டும். அந்த நிபந்தனைகளில் என்ன நிறைவேற்றவேண்டும் என்று விவர அறிக்கையிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த விவர அறிக்கையை எடுத்துக்கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சென்று அதைக் காண்பித்துத் தேவையான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று அவருக்கு நான் உங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)